நவீன மிக்ஸிங் கமரா மூலம் உங்கள் இல்லங்களில் நடைபெறும் மங்களகரமான நிகழ்ச்சிகளை வீடியோ படம் ஆக்கிட
சுப்பஸோ
வீடியோ ஒடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

★ புதிய, பழைய சினிமாப் பாடல்களைப் பதிவு செய்து கொள்ளவும்
★ வீடியோ படக் கசட்டுக்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ளவும்
சுப்பஸோ
வீடியோ ஒடியோ சென்ரர்
198/5, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2024 மார்கழி 14 புதன்கிழமை (29 – 12 – 1993) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 33

விமானப்படையினரின் புதிய தளபதியாக ஒலிவர் ரணசிங்க

கொழும்பு, டிச. 29

விமானப்படையின் புதிய தளபதியாக எயர் வைஸ் மார்ஷல் ஒலிவர் ரணசிங்கவை ஜனாதிபதி நியமித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டு பெப்ரவரி மாதம் 18 ஆம் திகதி புதிய பதவியை இவர் ஏற்பார் என்றும்—

அத்திகதியில் இருந்து அவர் எயர் மார்ஷலாக பதவி உயர்வு பெறுவார் என்றும்— பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களை மேற்கொள் காட்டி சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டிருக்கிறது:

திரு. ரணசிங்கா தற்போது விமானப் படையின் தலைமை நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகின்றார்.

தற்போதைய விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா பெப்ரவரி 17 ஆம் திகதி ஓய்வு பெறுகிறார்.

விமானப்படையின் புதிய தலைமை நிர்வாக அதிகாரியாக யார் நியமிக்கப்படுவார் என்பது அறிவிக்கப் படவில்லை. (இ-எ)

இன்றும் படகுச் சேவை

யாழ்ப்பாணம், டிச. 29

கிளாலி — பூநகரிப் படகுச் சேவை இன்று புதன் கிழமையும் வழமையான நேரத்தில் நடைபெறும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர். (ஒ)

மட்டக்களப்பு கிராமங்களில் படையினர் தீவிர தேடுதல்!

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் கைது

யாழ்ப்பாணம், டிச. 29

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா படையினரின் சுற்றிவளைப்பு, தேடுதல் நடவடிக்கைகள் அதிகரித்துள்ளதோடு பெருமளவு தமிழ் மக்கள் கைது செய்யப்பட்டும் வருகின்றனர்.

கடந்த வெள்ளியன்று காலை உன்னிச்சை இராணுவ முகாம் இராணுவத்தினரும், ரெலோ தேசத்துரோகிகளும் இணைந்து சாவக்குடிச்சேனை காந்திநகர், சின்னரிப் பிமடு ஆகிய கிராமங்களைச் சுற்றி வளைத்து தேடுதல் நடத்தினரென்றும்—

இத் தேடுதலின் பின்னர் 6 பேர் இராணுவத் தினரால் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும்— தெரிவிக்கப்படுகிறது.

(4ஆம் பக்கம் பார்க்க)

பூநகரிப் பேரழிவு
31 ஆம் திகதிக்கு முன் அறிக்கை

கொழும்பு, டிச. 29

பூநகரி பேரழிவு குறித்து விசாரித்து வரும் இராணுவ விசாரணை நீதிமன்றம் இம்மாதம் 31 ஆம் திகதிக்கு முன் தனது அறிக்கையை இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவிடம் சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது:

சிசில் வைத்தியரத்னா இம்மாதம் 31 ஆம் திகதியே ஓய்வு பெற்றுச் செல்கிறார்.

அப்படி நீதிமன்றம் அறிக்கை சமர்ப்பிக்கும் பட்சத்தில், அந்த அறிக்கையை தமது சிபார்சுகளுடன் பாதுகாப்பு அமைச்சுக்கு சிசில் வைத்தியரத்னா அனுப்பி வைப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-எ)

அமைச்சரவையில் மாற்றம் வரும்
இருவர் பதவி இழப்பர்

புதுடில்லி, டிச. 29

பிரதமர் நரசிம்மராவ் அடுத்த மாதம் இந்திய மத்திய அமைச்சரவையை மாற்றி அமைக்க இருக்கிறார் என்றும் —

இரண்டு அமைச்சர்கள் அப்போது பதவி இழப்பர் என்றும் — புதுடில்லிச் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழ் நாட்டைச் சேர்ந்த முன்னாள் அமைச்சர் ப. சிதம்பரத்துக்கு மீண்டும் அமைச்சர் பதவி கிடைக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பதவி இழக்க இருக்கும் அமைச்சர்கள் தினேஷ் சிங், கப்டன் சதீஸ் சர்மா என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

யுத்தத்தை உடன் நிறுத்தி பேச்சை ஆரம்பியுங்கள்!

கொழும்பு சமாதான மாநாட்டில் புத்திஜீவிகள் கூட்டாக வலியுறுத்து

கொழும்பு, டிசம்பர் 29

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளாக தொடர்ந்து நடந்து கொண்டிருக்கும் இனப் போருக்கு முடிவுகட்ட சமாதான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டும்; உடனடியாக யுத்தத்தை நிறுத்தி பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்;

— இவ்வாறு நேற்று முன்தினம் கொழும்பில் சமாதான மாநாடு ஒன்றில் உரையாற்றிய புத்திஜீவிகள் பலரும் வற்புறுத்தியிருக்கின்றனர்;

வடக்கு -கிழக்கு யுத்தத்தை உடனடியாக நிறுத்தி, சமாதானப் பாதையில் அடியெடுத்து வைக்குமாறு அரசியல்வாதிகளைக் கோரும் நோக்குடன் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

வடக்கு - கிழக்கு பொருளாதார அபிவிருத்திச் சங்கம் "அமைதிக்கான பாதை" என்ற தலைப்பில் நடத்திய இந்த மாநாடு கொழும்பு தர்மபால மாவத்தையில் உள்ள ஜெயவர்த்தனா கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இஸட்ஹுசெயின் மாநாட்டுக்குத் தலைமை வகித்தார்.

புத்த பிக்கு உட்பட சிங்களவர்கள், தமிழர்கள் அடங்கிய பிரமுகர்கள் இந்த மாநாட்டில் உரையாற்றினர்.

தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும் போருக்கும் இனப்பிரச்னைக்கும் சமாதானத் தீர்வு காணும் விடயத்தை இனிமேலும் அரசியல் வாதிகளிடமும் அரசியல் கட்சிகளிடமும் விட்டு விட்டு இருக்க முடியாது என்று கருத்தரங்கில் உரையாற்றிய பலரும் கருத்து வெளியிட்டனர்.

தென் மாகாணத்தைச் சேர்ந்த புத்த பிக்குவான வண. பத்தேகம சமித்த அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ் மக்கள் மீது எந்தத் தீர்வும் திணிக்கப்படக் கூடாது. தீர்வைத் திணிக்கும்

(4ஆம் பக்கம் பார்க்க)

காமினிக்கான, பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, டிச. 29

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் காமினி திஸநாயக்காவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலீஸ் பாதுகாப்பு நேற்று முன்தினம் முதல் விலக்கப்பட்டுள்ளது.

ஒரு சப். இன்ஸ்பெக்டர், ஒரு பொலீஸ் சார்ஜன்ட், இரு பொலீஸ் கான்ஸ்டபிள்கள் ஆகியோர் ஆயுத பாணிகளாக காமினிக்கு கடந்த மே மாதம் முதல் பாதுகாப்பு வழங்கி வந்தனர்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கொலையை அடுத்து இவருக்கு பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

மேலிட உத்தரவுப்படி இவருக்கான பாதுகாப்பு விலக்கப்படுவதாக பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-3-6)

ஆதரவு தேடி
தொண்டா சூறாவளி சுற்றுப் பயணம்

கொழும்பு, டிச. 29

இ.தொ.காவின் நிர்வாக சபைக் கூட்டம் எதிர்வரும் 2 ஆம் திகதி அட்டனில் நடைபெற இருப்பதைத் தொடர்ந்து இ.தொ.கா. தலைவர் திரு. எஸ். தொண்டமான் தமது நிலைப்பாட்டுக்கு ஆதரவு திரட்டுமுகமாக மலை நாட்டுப் பகுதியில் சூறாவளிச் சுற்றுப் பயணம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

எதிர்வரும் 2 ஆம் திகதி அட்டனில் நடைபெறும் நிர்வாகசபைக் கூட்டத்தில் இ.தொ. காவுக்கும் அரசுக்கும் இடையிலான உறவு குறித்து தெளிவான ஒரு தீர்மானம் எடுக்கப்படும் என்று நம்பப்படுகிறது. (இ-6)

'புத்தளத்தை புலிகள் தாக்கலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், டிச. 29

புத்தளம் பகுதியை விடுதலைப் புலிகள் தாக்கலாம் என்ற அச்சம் காரணமாக அப்பகுதியை பலப்படுத்தும் முயற்சியில் ஸ்ரீலங்கா படையினர் ஈடுபட்டுள்ளனர்.

புத்தளம் எலிபன்குளம், மன்னார் வரையிலான பகுதிகளில் உள்ள சிங்களக் கிராமங்களுக்கு படையினரால் பூரண பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

புத்தளம் தொடக்கம் மன்னார் வரையான கரையோரப் பகுதியில் உள்ள சிங்கள மீனவரை பாதுகாப்புடன் கடற்றொழிலுக்கு செல்லுமாறு பொலிஸார் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இதுவிடையே புத்தளம் பகுதியில் தமிழர்கள் பெருமளவில் கைது செய்யப்படுவதுடன், கெடுபிடிகளும் பிரயோகிக்கப்படுகின்றன.

அண்மையில் 30 தமிழர்கள் அங்கு கைது செய்யப்பட்டிருந்தனர். (இ-3)

மேலும் 3 எம். ஐ. 17 ரக ஹெலிகளை வாங்க முடிவு

கொழும்பு, டிச. 29

இலங்கை விமானப்படைக்கு மேலும் மூன்று புதிய சோவியத் எம். ஐ — 17 இராணுவ போக்குவரத்து ஹெலிக் கொப்டர்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பல்வேறு தரப்பினர் இந்த ஹெலிக்கொப்டர்களை விற்க முன்வந்துள்ளனர் என்றும் —

அவர்களின் கோரிக்கைகள் பரிசீலனையில் இருப்பதாகவும் — விமானப்படை அதிகாரி ஒருவர் கூறினார்.

இதனிடையில் — தற்போது விமானப்படையினர் பயன்படுத்திவரும் சீன வை — 8 ரக போர் விமானம் தொடர்பான சில பிரச்சினைகள் குறித்து பேச்சு நடத்தித் தீர்வு காண்பதற்காக விமானப்படைத் தளபதி ரெறன்ஸ் குணவர்த்தனா சீனா சென்றுள்ளார் என்றும் — அங்கு அவர் சிரேஷ்ட அதிகாரிகளுடன் பேச்சுகள் நடத்தி வருவதாகவும் — பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்தனர். (இ-எ)

வல்வை - தொண்டமானாறு கடலில் பீரங்கித் தாக்கு

வடமராட்சி, டிச. 29

வல்வெட்டித்துறை — தொண்டமானாறு பகுதிக் கடலில் கடற்படையினர் நேற்றுக் காலை 6.30 மணி முதல் அரை மணித்தியாலமாக பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதல் சம்பவத்தால் அதிர்ச்சி அடைந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 70 வயதுடைய வல்வெட்டித்துறை வாசி ஒருவர் மாரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

திருச்சிற்றம்பலம் ரத்தினவடிவேல் (வயது 70) என்பவரே இறந்தவர் ஆவார்.

கடற்படையினரின் தாக்குதலையடுத்து கடற்பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் தொழிலை விட்டு கரை சேர்ந்தனர். (இ-3-173)

கிளாலி, பூநகரித் தோல்விகளை அடுத்து
மேலும் ஆயுத தளபாடங்கள் இராணுவத் தரப்பு கோருகிறது

கொழும்பு, டிச. 29

புதிய போர் டாங்கிகள், ஆளணி கவச வாகனங்கள், ஆட்லறி ஆயுதங்கள், கிரனேட்டுக்கள் மற்றும் போர்த் தளபாடங்கள் தேவைப்படுவதாக இராணுவம் அரசுக்கு தெரிவித்துள்ளது.

இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்கு அரசு திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கிளாலி, பூநகரி தோல்விகளின்போது ஏற்பட்ட ஆயுத இழப்பை ஈடுசெய்யவே இராணுவம் புதிய ஆயுதங்களை கோரியுள்ளது.

புதிய ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கு பல லட்சம் ரூபா பணம் அரசுக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

கடற்புலிகளைச் சமாளிக்க அதிவேக தாக்குதல் படகுகள்

கொழும்பு, டிச. 29

கடற்புலிகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்க கடற்படைக்கு மூன்று அதிவேக தாக்குதல் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்றும்—

இதற்காக அரசாங்கம் சர்வதேச ரீதியில் ரெண்டர்களைக் கோரியிருப்பதாகவும் "சண்டே ஐலண்ட்" அதிகாரபூர்வ வட்டாரங்களை மேற்கோள் காட்டி செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடற்புலிகள் தங்கள் நடவடிக்கைகளை விரிவுபடுத்தி பலப்படுத்தி வருவதாகவும் —

இது குறிப்பாக வடபகுதியில் இராணுவத்துக்கு கணிசமான அளவு ஆபத்தை ஏற்படுத்தி இருப்பதாகவும் — பாதுகாப்பு பகுப்பாய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த நிறுவனம் ஒன்றும் மற்றும் இஸ்ரேலிய, கொரிய நிறுவனங்களும் அதிவேக தாக்குதல் கடற்படைக் கப்பல்களை விற்க முன் வந்திருப்பதாகவும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி சண்டே ஐலண்ட் செய்தி வெளியிட்டிருக்கிறது.

பிரெஞ்சு நிறுவனம் ஒன்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

சந்திரிகா பதவிக்கு ஆபத்து ஏற்படுமா?

மேல் மாகாண சபை முதல்வர் திருமதி சந்திரிகா குமாரணதுங்காவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர ஐ.தே.க. முயற்சி மேற்கொண்டுள்ளதாக சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

சந்திரிகாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரும் முயற்சியில் உயர் கல்வி அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா தீவிரமாக ஈடுபட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியில் இருந்து அனுரா வெளியேறியதற்கு சந்திரிகாவே முக்கிய காரணம் என்பது தெரிந்ததே.

சந்திரிகா மீது நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டு வரப்பட்டால் தற்போது நெருக்கடிக்கு உள்ளாகி இருக்கும் மாகாண சபைகளில் மேல் மாகாணசபையும் இடம் பெற்றுவிடும் என்று தெரிவிக்கப்பட்டது. [இ-3-6]

முச்சந்தி முரளி

காமினியின் பாதுகாப்பை விலக்கிவிட்டால் ஒரு தலையிடியைத் தீர்த்து விடலாம் என்று உத்தமர் நினைக்கிறார் போலும்.....

கிழக்கு வெள்ளத்தில் இதுவரை 4 பேர் பலி

கொழும்பு, டிச. 29

கிழக்கில் ஏற்பட்டுள்ள வெள்ளத்தால் இதுவரை 4 பேர் இறந்துள்ளனர் என ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன.

கடந்த 17 ஆம் திகதி முதல் பெய்யும் பெரு மழையினால் மட்டக்களப்பு, இருதோணமலை மணலாறு, பொலன்நறுவ ஆகிய பகுதிகளில் உள்ள பல நீர்ப்பாசனக் குளங்கள் நிரம்பியுள்ளதாகவும் —

இந்த வெள்ளத்தால் இரண்டு லட்சத்து 75 ஆயிரம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

வெள்ளத்தினால் படையினரும் அவதி

லண்டன், டிச. 29

வடக்கு — கிழக்கு மாகாணங்களில் ஏற்பட்டுள்ள வெள்ளம் மக்களுக்கு மட்டுமல்ல வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, மணலாறு பகுதிகளில் பெரும் எண்ணிக்கையில் நிலை கொண்டிருக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் நடைமுறைச் சிக்கல்களைக் கொண்டு வந்துள்ளது.

பி. பி. ஸி மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தது. (இ-3)

தொடர்ந்து தோல்விதான்; அப்படியிருக்கையில்
பூநகரிப் படுதோல்விக்காக சிசிலை மட்டும் தண்டிப்பதா?

ஆங்கில வார இதழில் கேள்வி

கொழும்பு, டிச. 29

விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில் இராணுவம் ஆரம்பம் முதல் தொடர்ச்சியாகத் தோல்விகளையே சந்தித்து வந்துள்ளது.

— இவ்வாறு "சண்டே ஐலண்ட்"டில் வெளியான கட்டுரை ஒன்றில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவம் தொடர்ச்சியாக தோல்விகளைச் சந்தித்து வருகையில் —

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னா மீது மட்டும் தண்டிப்பது எவ்வாறு நியாயமாகும் என்ற பாணியில் இக் கட்டுரையில் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது.

இ. எ. சந்திரிபிரேமா — என்பவர் எழுதிய அக்கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

சிசில் வைத்தியரத்னா இராணுவத் தளபதியாக வருவதற்கு முன்னர் விடுதலைப் புலிகளுக்கு எதிராக இராணுவம் மேற்கொண்ட நடவடிக்கைகள் எல்லாம் வெற்றி பெற்றிருந்திருப்பின் வைத்தியரத்னா சண்டையை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்திருக்காதே!

ஆகவே கிளாலி, பூநகரி

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

அடை வைக்கக்கூடிய நல்ல இன கோழி முட்டைகள், பன்டம் கோழி முட்டைகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (28616)

ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஆக்கிய மாணவர்களுக்கான மாண்புறு கதைகள் – வெளியீடு: ஞானபண்டிதன், மாணவர் முன்னேற்றச் சங்கம், நல்லூர். (28626)

தமிழீழ, அரசாங்க, விடுமுறை நாட்கள் அடங்கிய படக் கலண்டர்கள் ரூபா 6/-க்கு எம்மிடம் விலாசம் பதிப்பித்து பெற்றுக்கொள்ளலாம். மற்றும் பெரிய நடுத்தர கலண்டர்களுக்கும் ஸ்ரீலங்கா அச்சகம், ராஜா தியேட்டர் அருகில், ஸ்ரீகாந்தா அச்சகலேன், யாழ்ப்பாணம். (28628)

புதிய முதிரை பலகைகள் (அகலம் 12அங். 24அங். வரை), நிலைகள், யன்னல்கள், பாலை தீராந்திகள் விற்பனைக்குண்டு. கு. வல்லிபுரம், இராமலிங்கம் வீதி, (முடமாவடி) திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம். (28641)

நல்ல நிலையில் உள்ள ஹொண்டா லீட் விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சந்திரன் கராஜ், வீரமாகாளி அம்மன் கோயில் அருகில், பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம். (28642)

ஆனந்தா கலண்டர்

1994ஆம் ஆண்டுக்கான ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர் வெளிவந்துவிட்டது. நாள், திதி, யோகம், நட்சத்திரம், விடுமுறைநாட்கள், கோயில் விழாக்கள் முதலிய பல விவரங்களும் அடங்கியது. விலை ரூபா 30/- மட்டுமே. ஆனந்தா புத்தகசாலை, 226, காங்கேசன்துறை சாலை, யாழ்ப்பாணம். (சி-6839)

தேவை

பில் கிளார்க் ஒருவர் தேவை. (பெண் பாலார் விரும்பத்தக்கது) 31-12-1993 க்கு முன்னர் நேரில் சமுகம் தரவும். சன்லைட் றைக்கிளினேர்ஸ், ராணி சினிமா அருகில், யாழ்ப்பாணம். (சி 6834)

மணமகள் தேவை

4இல செவ்வாய். நட்சத்திரம் விசாகம், வயது 30 நிலை அளவையாளராகத் தொழில் புரியும் மணமகனுக்கு மணமகள் தேவை இ. பாஸ்கரன், 41, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (28631)

தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திலிருந்து மல்லாகம் செல்லும் வழியில் மருதனார்மடத்திற்கு இடையில் எனது கைச்சங்கிலி தவறிவிட்டது. தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் யோகா ஸ்ருடியோ & வீடியோ, கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (6761)

31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 10 — 06 — 1907

உதிர்வு: 30 — 11 — 1993

திருமதி செல்லையா செல்லம்மா

ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவரும், யாழ்ப்பாணம் சென்ஜேம்ஸ் வீதியில் வசித்தவருமாகிய திருமதி செல்லம்மா 30-11-1993 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியும், திருமதி யோகேஸ்வரி, சந்திரசேகரா (Rtd. Supt of Surveyor), சண்முகலிங்கம் (Rtd. Post Master), தில்லைநாதன் (Doctor), திருமதி பத்மாவதி, காலஞ்சென்ற Dr தயானந்தன், நித்தியானந்தன் (Rtd., D. I., C. T. B.) ஆகியோரின் அன்புத் தாயாரும், பாலசுப்பிரமணியம் (Rtd. Supt. of Surveyor), கனகராணி, தனபாக்கியம் (Rtd. Supervisor of Tele. Com.), புஸ்பராணி, மகேந்திரன் (Rtd. P. H. I), கமலா, சந்திரலதா ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று 29-12-1993இல் நடைபெறும்.

தகவல்:
திருமதி மகேந்திரன் (மகள்).

183, சென்ஜேம்ஸ் வீதி,
யாழ்ப்பாணம். [28643]

4ஆம் ஆண்டு நினைவஞ்சலி

சின்னையா கனகரத்தினம்

(மகாலிங்கம்)
(ஹப்பி ரெக்ஸ்ற்)

மலர்வு: 05 — 07 — 1952
உதிர்வு: 11 — 01 — 1990

திதி: 29 - 12 - 1993

எங்களை விட்டுப் பிரிந்து நான்கு ஆண்டுகள் சென்றாலும் உங்கள் நினைவால் வாடும்:

மனைவி, பிள்ளைகள்,
உறவினர்கள்.

நாவலர் வீதி,
அரியாலை. [28621]

1,500 தபால் பொதிகள் கொழும்பில் தேக்கம்!

வாதுவவில் எடுத்து வர முயற்சி

யாழ்ப்பாணம், டிச. 29

கொழும்பில் தேங்கிக்கிடக்கும் ஆயிரத்து 500க்கும் அதிகமான தபால் பொதிகளை, 'வாதுவ' கப்பலில் எடுத்துவர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த மாதம் கப்பலில் ஏற்றப்பட்டு மீண்டும் இறக்கப்பட்ட 600 தபால் பொதிகளுடன், அதன் பின்னர் சேர்ந்த தபால்பொதிகளுமாக மொத்தம் 1,500 பொதிகள் எடுத்து வரப்படவிருப்பதாக யாழ். தபாலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மூன்று மாதங்களாக தபால் பொதிகள் எடுத்து வரப்படாததால், முத்திரைகளும் எடுத்து வரப்படவில்லை என்றும்—

அதனால் முத்திரைகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும் — அவர் மேலும் தெரிவித்தார்.

வாதுவ கப்பல் அடுத்த மாதம் முதல் வாரத்தில் பருத்தித்துறைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (இ-3)

வல்வை சனசமூக சேவா நிலைய பொன் விழா நாளை

யாழ்ப்பாணம், டிச. 29

வல்வை சன சமூக சேவா நிலையத்தின் பொன் விழா நாளை மாலை 4மணிக்கு நடைபெறவிருக்கிறது.

வல்வை முத்துமாரியம்மன் கோவில் வீதியில் நடைபெறும் இவ் விழாவில் யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சுந்தரம் டிவகலாலா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். விடுதலைப் புலிகளின் கடற்புலிகள் பிரமுகர் விசேடவிருந்தினராகவும்—

வல்வெட்டித்துறை நகரசபைச் செயலாளர் திரு நஞானவேல் நிலைய முதல் பொளாளர் திரு.ம.வெங்கடாசலபிள்ளை, நிலையச்காப்பாளர் திரு.ச.சச்சிதானந்தவேல் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும்—கலந்துகொள்வர்.

நிலையத்தின் முன்னை நாள் தலைவர்கள், செயலாளர்கள், பொருளாளர்கள், ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பெற்ற மாணவர்கள், பலகலைக்கழகத்துக்கு அனுமதி பெற்ற மாணவர்கள், நாடகக் கலைஞர்கள் கௌரவிக்கப்பட விருக்கின்றனர்.

இலக்கியப் போட்டிகளுக்கான பரிசளிப்பு மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும். (இ-3)

பேசாலை ஆஸ்பத்திரி வெள்ளத்தில்

யாழ்ப்பாணம், டிச. 29

மன்னாரில் தொடர்ந்து பெய்து வரும் பெரு மழையினால் பேசாலை வைத்திய சாலை வெள்ளத்தில் மூழ்கியுள்ளது.

இதனால் வைத்தியசாலை இயங்குவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. (இ-3)

காங்கேசன் சிமெந்து ஊழியர்

நியாயமான நஷ்டஈடு பெற்றுக்கொடுக்க முயற்சி

கொழும்பில் பேச்சுவார்த்தை

யாழ்ப்பாணம், டிச. 29

காங்கேசன் சிமெந்து ஆலை மூடப்படுவதால் அங்கு கடமையாற்றும் 800 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு நியாயமான நஷ்டஈடு பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சிமெந்து பொதுத் தொழிலாளர் யூனியன் கொழும்பில் பேச்சு நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டது.

விடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன குரே மற்றும் சிமெந்துக் கூட்டுத்தாபன தலைவர் ஆகியோருடன் இது தொடர்பாக பேச்சு நடைபெற்று வருகிறது.

வேலை இழக்கும் தொழிலாளர்களுக்கு "புழுமுல்" கமிஷன் கியார்சு செய்த நஷ்டஈட்டுத் தொகையை வழங்க அரசு முடிவு செய்துள்ளதாகவும் —

அந்த நஷ்டஈட்டுத் தொகை போதுமானது அல்ல என்றும்—சிமெந்து தொழிலாளர் யூனியன் தெரிவித்துள்ளது.

தொழிலாளர்களுக்கு நியாயமான நஷ்டஈடு வழங்க அரசு முன்வராத பட்சத்தில் தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய தொழிற் சங்கங்கள் முஸ்தீபு செய்து வருகின்றன.

அதேவேளை — சிமெந்து கூட்டுத்தாபன தலைமையத்தில் பணி புரியும் சிங்கள ஊழியர்கள் தமக்கு நஷ்டஈடாக 30 மாதச் சம்பளம் தருமாறு கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

இன்று

யாழ்ப்பாணம், டிச. 29

அச்செழு மத்தி வாசகர் வட்டத்தின் ஆண்டு விழா இன்று பிற்பகல் 3 மணிக்கு அச்செழு மெ. மி. த. க. பாடசாலையில் நடைபெறும்.

வினாடி வினாப் போட்டி, கவிதையரங்கம், பட்டிமண்டபம், வில்லிசை ஆகிய நிகழ்ச்சிகள் இடம்பெறும். (இ-3)

★ ★ ★

வடமராட்சி, டிச. 29

வல்வெட்டித்துறைப் பகுதியைச் சேர்ந்த உயர்தர வகுப்பு மாணவர்களுக்கான கல்விக் கருத்தரங்கு ஒன்று இன்று புதன்கிழமை வல்வெட்டித்துறை அமெரிக்க மிஷன் வித்தியாலயத்தில் வல்வை கல்வி அபிவிருத்திக்கழகத்தினால் நடத்தப்படவுள்ளது. (இ-173)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

விஞ்ஞான பீடம்

1992/93ஆம் கல்வி ஆண்டிற்கு விஞ்ஞான பீடத்தில் பௌதீகவியல்—உயிரியல் கற்கை நெறிகளுக்கு தங்களைப் பதிவு செய்து கொண்ட எல்லா மாணவர்களுக்கும் 1994-01-03ஆம் திகதி தொடக்கம் கணனி விஞ்ஞான ஆரம்ப பயிற்சி நெறிக்கான விரிவுரைகள் ஆரம்பமாக உள்ளன. எனவே மேற்படி நெறிகளுக்கு தங்களைப் பதிவு செய்து கொண்ட சகலரும் 1994-01-03ஆம் திகதி வகுப்புகளுக்கு சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

முதலாம் வருடத்தில் கணனி விஞ்ஞானத்தை ஒரு பாடமாக கற்க விரும்புவர்களது தெரிவு இந்த ஆரம்ப கணனி விஞ்ஞான வகுப்புக்களின் முடிவில் நடைபெறவிருக்கும் தகுதி காண்பரீட்சையில் இருந்தே செய்யப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

—பதிவாளர்

[சி-6787]

பிற்போடப்பட்டுள்ளது

வணிகஜோதி 16வது மலர் வெளியீட்டு நிதிக்காக இன்று (29-12-93) அதிர்ஷ்டம் பார்க்கப்பட இருந்த அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு 10 — 01 — 94 திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

வர்த்தக மாணவ மன்றம்
மாணவரத்தினம் ம.ம.வி.

(28652)

விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

O'L EVENING CLASSES (3-15 — 6-00)
SAT., SUN CLASSES (8-00 — 1-00)

ஆண்டு 10ஆம், 9ஆம், 8ஆம், 7ஆம், 6ஆம் (3-15 — 6-00) க்கான அனுமதிகளை 27-12-93 இல் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

ஆரம்பம்: 06 - 01 - 1994

(சி-67745) — அதிபர்

வீடியோ நாடா விநியோகஸ்தர்களுக்கு

நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த வரலாற்றுப் பெருமைமிக்க

பூநகரிச் சமர் இடம் பெறும்

★ ஒளி வீச்சு ★

(நவம்பர் 93) வீடியோ நாடா

கலை ஊடக இணையத்தில் பதிவு செய்து (Recording) பெற்றுக் கொள்ளவும

(ஒளிவீச்சு நாடா பதிவு செய்து விநியோகிக்கும் உரிமை கலை ஊடக இணையத்துக்கு வழங்கப்பட்டுள்ளது).

யாழ். மாவட்டத்திலுள்ள சகல வீடியோ நாடா விநியோகஸ்தர்களும் தவறாது கலை ஊடக இணையத்தில் இவ் ஒளிவீச்சை பதிவுசெய்து பெற்றுக் கொள்ளவும்.

பதிவுக் கட்டணம் 100/- ரூபா மட்டுமே.

தொடர்ந்து மாதந்தோறும் வெளியாகும் ஒளி வீச்சை கலை ஊடக இணையத்தில் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.

கலை ஊடக இணையம்,
117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, யாழ்ப்பாணம்.

குறிப்பு: கலை ஊடக இணையத்தில் இதுவரை அங்கத்துவம் பெறாதவர்கள் தாமதமின்றி பதிவு செய்து கொள்ளவும். (28648)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தேர், ஆலய வாயிற் கோபுரங்கள் புனருத்தாரண வேலைகளுக்கான

கேள்விப் பத்திரங்கள் கோருதல்

மேற்படி ஆலயத்தின் மேற்கானும் வேலைகளுக்கு தகுந்த சிற்பாஸ்திரிகள், வர்ணம் பூசுவோர்களிடம் இருந்து கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

1. தேர் - தேரின் மேற்பகுதியான எழுதகம் முழுவதற்கும் நாம் கூறும் தடிப்புள்ள பித்தளைத் தகட்டினால் மூடுவதற்கும், மற்றும் விவரங்களை ஆலய முகாமையாளரிடம் பெற்றுக்கொள்ளவும்.
2. ஆலய கோபுரங்கள், மண்டபம் மைபூசுதல். மேற்படி வேலைக்குரிய பொருள்கள் ஆலயத்தினால் வழங்கப்படும். (கூலி மட்டும்)

மேற்படி வேலைகளுக்கான கூறுவிலைகள் யாவும் 8 - 1 - 1994 நண்பகல் 12 மணிக்கு முன்பு பதிவுத் தபாலில் தலைவர், மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயம், மானிப்பாய் என்ற முகவரிக்கு அனுப்பவும். கூறுவிலைகள் தனித்தனி தபாலில் அனுப்பப்பட்டு தபாலின் வெளிப்புறத்தில் வேலையின் பெயர் குறிக்கப்பட வேண்டும்.

செயலாளர்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தருமகர்த்தாக்கள் சபை.

(28651)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை

பிரிவுபசார விழா

யாழ்/ கோப்பாய் ஆசிரிய கலாசாலை இரண்டாம் வருட ஆசிரிய மாணவர்களுக்கான பிரிவுபசார விழா 31 - 12 - 93 வெள்ளிக்கிழமை காலை 8 30 மணிக்கு நடைபெறவுள்ளது. இவ்விழாவில் கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர், விரிவுரையாளர்கள் 2ஆம், 1ஆம் வருட ஆசிரிய மாணவர்கள், சிற்றூழியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

1ஆம் வருட ஆசிரிய மாணவர்கள்
கோப்பாய்.

(சி/6788)

45ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர் அன்ரன் ஜீவகுணரட்ணம்

(ஆசிரியர் யா/ வசாவிளான் ம.ம.வி.)

மலர்வு: 12 — 06 — 1963
உதிர்வு: 15 — 11 — 1993

எம்முடன் மகாஜனாக் கல்லூரியில் நிசைகோள் உறுத்தல் பயிற்சியிலும் எமது சங்கத்தின் செயலாளராகவும் இருந்த அந்த சில இனிய நாட்களை நினைக்கின்றோம். அவை என்றுமே மறையாது.

தங்கள் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

பயிற்சி ஆசிரியர்கள்
தொலைக்கல்வி நிலையம்,
தெல்லிப்பழை.

(6763)

பாடசாலை மாணவர்களுக்கு

ஓர் அரிய சந்தர்ப்பம்

மலரப் போகும் புதுக்காண்டில் நந்து சொகுசு இருக்கை வசதிகளுடன் கூடிய 'டொயாட்டா கோஸ்டர்" பஸ் ஒன்று மலலாகத்தில் இருந்து வேம்படி மகளிர் பாடசாலைக் சந்தி, யாழ் நகர் வரை பாடசாலைச் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளது.

பயணம் செய்ய விரும்புவோர்
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

- மது புத்தகசாலை, கே. கே எஸ். வீதி, கொக்குவில்.
- பவிக்கிரா பேஷன் ஹவுஸ், கே. கே எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
- நித்தியா ஸ்பொட், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.
- சீகோ ஹாட்வெயர், கே. கே. எஸ். வீதி, தாவடிச் சந்தி.
- தாசன் ஸ்ருடியோ, கே. கே எஸ். வீதி, இணுவில்

[சி-6785] (28652)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி.
யாழ்ப்பாணம்.

இரட்டை முகமா?

கிழக்கு மாகாணத்தில் உள்ள உள்ளூராட்சி சபைகளுக்கும், வவுனியா நகர சபைக்கும் தேர்தல் நடத்தப் போவதாக அரசாங்கம் மூன்றாவது முறையாக அறிவித்திருக்கிறது. ஏற்கனவே இரண்டு தடவைகள் இது குறித்து, வேட்புமனுக்கள் தாக்கல் செய்வதற்கான திகதிகள் அறிவிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டது.

கிழக்கில் தேர்தல் நடத்துவதற்கான சூழ்நிலை தோன்றவில்லை. அமைதிநிலை உருவாகவில்லை. இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்தவர்கள் திரும்பவில்லை எந்த ஆண்டுக்குரிய தேர்தல் இடாப்பின் அடிப்படையில் தேர்தல் நடத்தப்படும் என்பது அறிவிக்கப்படவில்லை. ஆகையால் தேர்தலை நடத்துவது உகந்தது அல்ல என்று—

ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களும், தமிழ்க் கட்சிகள் என்று கூறிக்கொண்டு கொழும்பில் இயங்கும் குழுக்கள் சிலவும் விடுத்த கோரிக்கைகளை அடுத்தே முதலாவது தடவை தேர்தல் அறிவிப்பு ரத்து செய்யப்பட்டது. ஆனால் அதற்கு உண்மையான காரணம், தேர்தல் நடக்கக் கூடியதாகக் கிழக்கில் பாதுகாப்பு நிலைமை சீராக இருக்க வில்லை என்பதேயாகும்.

இரண்டாவது தடவை, வேட்புமனுத்தாக்கல் செய்வதற்கு திகதி விபரம் அறிவிக்கப்பட்ட இரண்டொரு நாட்களிலேயே ரத்து அறிவிப்பும் வந்துவிட்டது. அதற்கும் கிழக்கில் பாதுகாப்பு நிலைமை அரசாங்கத்துக்குச் சாதகமாக இல்லை என்பதாலேயே ஆகும்.

கிழக்கிலும் வவுனியாவிலும் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கு அரசாங்கம் அவசரப்படுவதற்கான நோக்கத்தை இப்பத்தியில் ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம்.

கிழக்குப் பகுதி அரசாங்கத்தின் பூரண கட்டுப்பாட்டில் உள்ளது. அங்கு அமைதி நிலவுகிறது. ஜனநாயகத்தைப் பிரதிபலிக்கின்ற தேர்தலில் தமிழர்களும் பங்குபற்றினார்கள். ஆகவே அவர்களுக்கு குறைகள் எதுவும் இல்லை. — இவ்வாறு ஒரு படத்தை வெளி உலகத்துக்கு காட்டுவது. அவ்வாறு காட்டுவதன் மூலம் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக அரசாங்கம் கூறும் நிலையை வெளி நாடுகளை நம்பவைப்பது. அப்படி நம்பவைத்து நிதி உதவிகளையும், கடனையும் பெற்றுத் தமிழருக்கு எதிரான யுத்தத்தைத் தொடர்ந்து அதில் வெற்றி காண்பது. அதுமட்டுமன்றி வடக்கையும் கிழக்கையும் பிரித்துவிடுவது. இந்த இரண்டு பிரதான நோக்கங்களுடனேயே அரசு தேர்தல் என்று தகிடுதத்தங்களை போடுகிறது.

இத்தகைய ஒரு தேர்தலில் பொதுமக்கள் முன்னணி வேட்பாளர்களை நிறுத்தி, தேர்தலில் பங்கேற்கப் போவதாக அறிவித்துள்ளது. இந்த முன்னணியில் முக்கிய பங்கு வகிப்பது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே. கிழக்கு உள்ளூராட்சித்தேர்தலில் சுதந்திரக் கட்சி போட்டியிடுவது என்பது அது தமிழர் விவகாரத்தில் இரட்டை முகம் காட்டுவதை நினைக்கிறது என்பதேயாம்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலை நாடி, சுதந்திரக்கட்சி, தமிழர் விவகாரத்தில் இதுவரை கடைப் பிடித்த நிலைப்பாட்டை மாற்றி, சாதகமாக நடந்து கொள்ளப் போவதான ஒரு தோற்றத்தை அண்மையில் காட்டத் தொடங்கியது. அக்கட்சியின் தலைவர்கள், பிரமுகர்கள், எம்.பிக்கள் தமிழர் பிரச்சினைக்கு அரசியல் நீர்வு காணப்படவேண்டும் என்றும், ஜனாதிபதியின் நிலைப்பாடு தவறானது என்றும் கூட்டிக் காட்டத்தொடங்கியுள்ளனர்.

ஆனால் கிழக்கு மாகாண உள்ளூராட்சித் தேர்தலில் பங்குபற்றுவது என்ற சுதந்திரக் கட்சியின் முடிவு, கிறது — கிழக்கைப் பிரிப்பது, வடக்கில் யுத்தத்தைத் தொடருவது என்ற அரசின் நடவடிக்கைகளை ஆதரிப்பதாகவும், அரசுக்கு முண்டு கொடுப்பதாகவும் அமைகிறது.

ஆகையால் அக்கட்சி தமிழர் விவகாரத்தில் இரண்டு முகங்களைக் காட்ட முயல்கிறது என்றமுடிவுக்கே வரவேண்டியுள்ளது.

சக்திமிக்க நவீன ஆயுதங்களைப் பறிகொடுத்ததன் எதிரொலி:

யுத்தம் வேண்டாம்; பேச்சுக்குப் போங்கள்!

தென்பகுதியில் இன்று ஒலிக்கும் கோஷம்!!

தென் பகுதியில் தற்பொழுது யுத்தம் வேண்டாம் சமாதானமே வேண்டும் என்ற கோஷம் பலமாக ஒலிக்கத் தொடங்கியுள்ளது. சுதந்திர பத்திரிகையாளர் சங்கம், பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் போன்றனவும் மேற்கண்ட கோஷத்தை எழுப்பியுள்ளன. அவை கருத்தரங்குகள், மாநாடுகள் நடத்தி யுத்தம் வேண்டாம், பேச்சுவார்த்தை வேண்டும் என்று குரல் கொடுக்கத் தொடங்கியுள்ளன.

அவை சமாதானத்தை வேண்டுவதற்கு முக்கிய ஏதுவாக இருப்பது தற்போது புலிகளிடம் சிக்கியுள்ள சக்தி வாய்ந்த நவீன ஆயுதங்கள் தான்.

அமெரிக்கா, சீனா, பிரான்ஸ், பிரிட்டன், செக்கோஸ்லேவேக்கியா, தென் ஆபிரிக்கா, இன்னும் எங்கெங்கோ எல்லாம் கோடி கோடியாகக் கொட்டி ஆயுதங்களை அள்ளிக் குவித்து வைத்திருந்தது ஸ்ரீலங்கா அரசு.

இன்று அதே ஆயுதங்களைத் தயவசம் வைத்துக்கொண்டு ஸ்ரீலங்கா அரசுக்கும், படைகளுக்கும் பீதியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் விடுதலைப் புலிகள்.

விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்தி, பேச்சுக்கு அழைக்கவென தருவிக்கப்பட்ட ஆயுதங்கள் — இன்று ஸ்ரீலங்கா அரசை பலவீனப்படுத்தி, பேச்சுக்குப் போங்கள் என சிங்கள இனவாதிகள் கோஷம் போடச் செய்துவிட்டன.

ஆயுதப் போராட்டம் ஆரம்பித்த காலம் முதல் ஆங்காங்கே அவ்வப்போது சிறு சிறு தொகையான துப்பாக்கிகளையும், கைக்குண்டுகளையும், தொலைத்தொடர்புச் சாதனங்களையும் ஸ்ரீலங்காப் படையினர் பறிகொடுத்து வந்தது வழமையான நிகழ்ச்சிகளாக இருந்து வந்திருக்கின்றன.

நிம்மதியற்று, கலங்கியிருக்கும் படையினர்

ஆனால் ஈழப்போர் — 2 ஆரம்பமான பின்னர் ஸ்ரீலங்கா அரசு தொடர்ச்சியாக ஒவ்வொரு தாக்குதலிலும் பல லட்சம் ரூபா பெறுமதியான ஆயுதத் தளபாடங்களையும், கனரக வாகனங்களையும், தொலைத்தொடர்புச் சாதனங்களையும் இழந்து கொண்டே வருகிறது.

1990இல் மன்னார் கொண்டச்சி முகாமில் பவள் கவச வாகனம் ஒன்றையுட் ஏராளமான ஆயுதங்களையும் தளபாடங்களையும் பறிகொடுத்து ஆரம்பமான இழப்புகள், தொடர்ந்தபடி உள்ளன.

இறுதியாக நடத்தப்பட்ட கட்டைக்காடு, மண்கிண்டிமலை, பூநகரி ஆகிய தாக்குதல்கள் ஸ்ரீலங்கா அரசை நிலைகுலைய வைத்துவிட்டன.

இழந்த ஆயுதங்கள் ரூபா 50 கோடி

இந்தத் தாக்குதல்களின் போது புலிகளிடம் பறிகொடுத்த ஆயுதங்களின் பெறுமதி ரூபா 50 கோடியைத் தாண்டும் என்று பாதுகாப்புத்துறைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த 50 கோடி ரூபா பெறுமதியான ஆயுதங்களை வாங்குவதற்கு ரெண்டர் கோரியது, கொள்முதல் செய்த ஆயுதங்கள் குறிப்பிட்ட முகாம்களுக்கு வந்து சேரும் வரையான அனைத்து செலவுகளும் (ஆயுதக் கொள்வனவு மூலம் அதிகாரிகள் பெற்ற கமிஷன் உட்பட) 100 கோடியைத் தாண்டும் என்று கூறப்படுகிறது.

புலிகளிடம் இழந்த ஆயுதங்களிலும் சில குறிப்பிட்ட ஆயுதங்கள்தான் அரசை கதிகலங்கச் செய்து கொண்டிருக்கின்றன என்று கொழும்பு பத்திரிகைகள் கூறுகின்றன. அந்தப் பட்டியலில் உள்ள அபாயகரமான ஆயுதங்களில் சில:

நீண்ட தூர பீரங்கிகள்

★ 120 மி. மீ. பீரங்கி 6 மைல் தூரத்திற்கு ஷெல் (ரவக் கூடியது)

இதில் 6 பூநகரியில் பறிபோய் விட்டனவாம்.

★ 130 மி. மீ. பீரங்கி (7 மைல் தூரத்துக்கு ஷெல் ஏவ முடியும்) இதில் 2 பூநகரியில் பறிபோய் விட்டனவாம்.

மேலும் 106 எம் எம். பீரங்கி ஒன்றும் பூநகரியில் பறிபோயுள்ளது.

இவைதான் இன்று படையினரை மிகவும் கலக்கத்திற்கு உள்ளாக்கி இருப்பவை. இந்த பீரங்கிகளினால் பலாலி, காரைநகர், ஆனையிறவு ஆகிய முகாம்கள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளதாக ராவய பத்திரிகை செய்த வெளியீட்டுள்ளது. இந்த பீரங்கிகள் புலிகளின் வசம் போனதால் வடக்கு யுத்த வடிவம் முழுவதுமாக வேறு உருவம்பெற்று விட்டது என அந்த பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

இந்தப் பீரங்கிகளைக் கொண்டு பலாலி முகாமை மட்டுமல்ல அங்கு நிறுத்தி வைக்கப்பட்டுள்ள விமானங்கள், ஹெலிக்கொப்டர்களையும் புலிகள் அழித்து விடும் அபாயம் உண்டு என்றும் ராவய குறிப்பிட்டுள்ளது.

மொத்தத்தில் இந்த ஆயுதங்கள் படையினரின் நிம்மதியைக் குலைக்கச் செய்துவிட்டன. இராணுவ முகாம்களின் மையப் பகுதிகளில் உள்ள உயரதிகாரிகளைக் கூட பங்கருக்குள் பதுங்க வைத்துவிட்டன இந்த ஆயுதங்கள்.

சுப்பர் டோறா 464 தாக்குதல் கப்பல்

ஸ்ரீலங்கா கடற்படையினரிடம் இருந்த ஒரே சுப்பர் டோறா இதுவாகும். 78 அடி நீளம், 18 அடி அகலத்தைக் கொண்டது. மணிக்கு-36கடல் மைல் வேகத்தில் செல்லக் கூடிய அதிவேகக் கப்பல். இஸ்ரேல் தயாரிப்பு இது.

இது கடந்த ஆகஸ்ட் 29இல் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டது. அதில் 120 எம் எம். பீரங்கி இரண்டும் 12.7 மி. மீ. துப்பாக்கி ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தன. அத்துடன் அதிக சக்தி வாய்ந்த வானொலித் தொடர்புச் சாதனமான ரான்ஸ் ரிசீவர் ஒன்றும், நவீன ராடர் கருவி ஒன்றும் பொருத்தப்பட்டிருந்தன.

புலிகள் இந்தக் கப்பலை கைப்பற்றி பெறுமதி வாய்ந்த பொருள்களை எடுத்துக் கொண்டு மீதியை வெடிவைத்து தகர்த்துவிட்டனர் எனச் சொல்லப்படுகிறது.

சீ - 55 டாங்கி

செக்கோஸ்லேவேக்கிய தயாரிப்பான இது பிரதான யுத்த டாங்கி (Main-Battle Tank) ஆகும். இது வார்சோ ஒப்பந்த நாடுகளின் இராணுவத்தினர் பாவிக்கும் டாங்கி வர்க்கமாகும். இது நேட்டோ படை அமைப்பின் இராணுவத்திற்கென பிரிட்டனினால் உருவாக்கப்பட்ட 105 மி. மீ. யுத்த டாங்கியின் வடிவில் அமைக்கப்பட்டது.

இந்த டாங்கியில் பொருத்தப்பட்டுள்ள 105 மி. மீ. பீரங்கியினால் ஆகக் கூடுதலாக 17 கிலோ மீட்டருக்கும் ஆகக் குறைந்தது 3.5. கிலோ மீற்றர் தூரத்துக்கும் குண்டுகளை ஏவலாம். நிமிடத்திற்கு 6 குண்டுகளை ஏவமுடியும்.

யாழ்தேவி நடவடிக்கையில் இந்த டாங்கிகளில் இரண்டு புலிகளால் அழிக்கப்பட்டன. பூநகரியில் இரண்டு டாங்கிகள் கைப்பற்றப்பட்டன. இவையும் நீண்டதூர பீரங்கிகளைப் போலவே படையினரை மிகவும் கலக்கடையச் செய்துள்ளன.

ரான்ஸ் ரிசீவர் தொலைத் தொடர்புச் சாதனம்

ஜகுவர் வி.எச்.எம./எல்.எம். என்ற இந்த தொலைத் தொடர்புச் சாதனம் ஸ்ரீலங்காவில் குறிப்பிட்ட அளவே உண்டு. அனைத்துப் படை உயர்மட்டங்களிலும் பாவிக்கப்படும். நம்பிக்கை வாய்ந்த சாதனம் எவருடையவானோ

இளவேந்தன்

லித் தொடர்புகளையும் சர்வ அலட்சியமாக இதன் மூலம் இடை மறித்து கேட்க முடியும். ஆனால் இந்தச் சாதனம் மூலம் அனுப்பும் செய்தி இடைமறித்துக் கேட்கப்படுமாயின் உடனே அது செயலிழந்து விடும்.

இதனை முதலில் மண்கிண்டிமலை தாக்குதலின் போது புலிகள் கைப்பற்றினர் என்றும், பூநகரி தாக்குதலிலும் இந்த வகையான சாதனத்தை புலிகள் கைப்பற்றினர் என்றும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

(தொடரும்)

சாக்குகள் விநியோகம்

யாழ்ப்பாணம், டிச. 29

சண்டிலிப்பாய் சங்கானை பகுதிகளில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளை ஐந்நூறுக்கும் மேற்பட்ட சாக்குகளை விநியோகித்துள்ளது.

இப்பகுதிகளில் உள்ள மக்கள் தமது குடியிருப்புக்களில் இரவு நேரங்களில் படுத்து உறங்குவதற்கு வசதியாகவே சாக்குகள் விநியோகிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஒ-17)

முட்டுக்கட்டை நிலையை அகற்ற

இஸ்ரேல் - பலஸ்தீன இயக்கம்

கெய்ரோவில் மீண்டும் பேச்சு

கெய்ரோ, டிச. 29

வரையறுக்கப்பட்ட பலஸ்தீன சுயாட்சி தொடர்பான சமாதான உடன்பாட்டை அமுலாக்குவதில் ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டையை அகற்றுவது தொடர்பான புதிய சுற்றுப் பேச்சுகளை இஸ்ரேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் நேற்று எகிப்து தலைநகர் கெய்ரோவில் ஆரம்பித்தன.

இஸ்ரேலின் சார்பில் அந்த நாட்டின் வெளியுறவு அமைச்சர் ஷிமொன் பெரெஸ் கலந்து கொள்கிறார்.

இருதரப்பினருக்கும் இடையேயான கருத்து வேறுபாட்டில் பெருமளவு இடைவெளி காணப்படவில்லை என்று எகிப்து வெளியுறவு அமைச்சர் தெரிவித்தார்.

இரு தரப்பினரும் நேற்று சந்திப்பு

முட்டுக்கட்டையைத் தீர்ப்பதற்கு வழங்க புதிதாக தம்மிடம் எதுவுமில்லை என்று இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமொன் பெரஸ் தெரிவித்தார்.

இருதரப்பினருக்கும் இடையே இன்னும் கருத்து வேறுபாடு இருப்பதாக பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் பிரதிநிதி தெரிவித்தார்.

(ஒ-எ)

நெல் வயல்களில் பரவலாக இலைச்சுருட்டித் தாக்கம்

யாழ்ப்பாணம், டிச. 29

அரியாலை, செம்மணிப் பகுதிகளில் உள்ள நெல்வயல்களில் கூடுதலாகவும், பரவலாக எல்லா இடத்திலும் இலைச் சுருட்டித் தாக்கம் காணப்படுகின்றது. இதனால் நெற்பயிர்கள் பச்சையம் இழந்து வெண்நிறமாகக் காணப்படுகின்றன.

இத்தாக்கம், விளைவை பெருமளவில் பாதிக்கும் என்பதனால் உடனடியாக குளோறோபைறிபொஸ் 20 வீதம் செறிகும்பு அல்லது பென்தயன் 50 வீதம் செறிகும்பு 25 மில்லி லீற்றரை 12 லீற்றர் நீர் கலந்து விசிறி கட்டுப்படுத்துமாறு தமிழழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு அறிவுறுத்துகிறது. (ஒ)

உருளைக்கிழங்கை வரம்பில் பயிரிடுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், டிச 29

உருளைக்கிழங்குச் செய்கை குறித்து தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாயிகளுக்கு சில அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளது.

உருளைக்கிழங்கை இரண்டு அடிக்கொன்றான இடைவெளியில் அமைக்கப்பட்ட வரம்புகளில் 10 அங்குலத்துக்கு ஒன்றாக நடுகை செய்வதுடன் இரு வரம்புகளுக்கு இடைப்பட்ட இடைவெளியே நன்கு நீர் வடியக் கூடியதாக வெட்டி விடுமாறும் ஓரங்களில் வடிகால்களை அமைக்குமாறு கூடுதலான உக்கிய சேதனப்பசளைகளை இடுமாறும், உருளைக்கிழங்கு செய்கையாளர் கேட்கப்படுகின்றனர்.

வழமையாகச் சால்களில் நடப்படுவது வழக்கம் ஆயினும் இப்போது பெய்துவரும் கடும் மழை காரணமாக இதுவரை நட்டபயிர், வலிகாமத்தில் பாதிப்படைந்துள்ளது.

இனி நடுகை செய்ய உள்ள விவசாயிகள், நல்ல மேட்டு நிலத்தில் மேற்படி வடிகால்களை அமைத்து நடுகை செய்தால் நல்ல விளைச்சலைப் பெற முடியுமென த. பொ. மே. நிறுவனம் செய்திக் குறிப்பொன்றில் அறிவித்துள்ளது.

(ஒ)

தென்மராட்சிப் பகுதித் தொழிலாளர்

நெசவு நூல், தளபாடம் இல்லாததால் பாதிப்பு

நெசவாளர் கூட்டத்தில் உரை

சாவகச்சேரி. டிச. 29

தென்மராட்சி நெசவுத் தொழிலாளர்கள் நெசவுத் தளபாடங்களும், நெசவு நூலும் இல்லாத காரணத்தால் இத்தொழிலைத் தொடர்ந்து செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

யாழ். மாவட்ட புடைவை நெசவாளர் சங்கத்தால் மட்டுவில் மகாவித்தியாலயத்தில் கடந்த 24 ஆம் திகதி நடத்தப்பட்ட தென்மராட்சி புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்க உத்தியோகத்தர் தெரிவுக் கூட்டத்தில் உரை நிகழ்த்திய சங்க உப-தலைவர் திரு. நா. ஏரம்பு இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், நெசவுத் தொழிலாளர்களுக்கு எல்லிதமான நிவாரணப் பொருள்களும் சமாசத்தால் கிடைப்பதில்லை. கூட்டுறவு சமாசம் கிறே நூலை நெசவாளர்களுக்கு வழங்கக்கூடிய நிலையிலிருந்தும் அந்நூலை தொழிலாளருக்கு வழங்காமல் இருப்பதாகவும் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் செயலாளர் மாணிக்கவாசகர் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்துகையில் கூறியதாவது:

நெசவாளர்களுக்கு கிறே நூலை ஒருவருக்கு 50 கிலோ வீதம் வழங்க சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

தென்மராட்சி சங்கத் தலைவர் திரு. சி. ஆறுமுகம், சங்கத் தேர்தல் அதிகாரி குணரத்தினம் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள்.

(க-ரி)

ஆங்கிலப் போதனையில் பாகுபாடு இருக்கக்கூடாது

கோட்டப் பரிசளிப்பு வைபவத்தில் உரை

கிராமப் புறப் பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஆங்கிலம் அவசியமில்லை என ஒரு காலத்தில் கருதப்பட்டது. ஆனால், கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் ஆங்கில கல்வியில் சிறப்பு தேர்ச்சிகளைப் பெறுகிறார்கள். இன்று இரண்டாம் மொழியாக ஆங்கிலத்தை சகல பாடசாலைகளிலும் கற்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் பாடசாலைகளுக்கிடைே [illegible] வளரவிடக்கூடாது.

மானிப்பாய் [illegible] மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற பண்டத்தரிப்பு கோட்ட பாடசாலைகளின் ஆங்கில தின பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றிய யாழ்ப்பாணம் வடக்கு வலய கல்விப் பணிப்பாளர் திரு. க. கந்தசாமி மேற்கண்டவாறு கூறினார்.

பண்டத்தரிப்பு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. துரைசிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது.

மாணவர்களுக்கான சான்றிதழ்களை [illegible] கல்வி பணிப்பாளர் திரு. [illegible] மேலும் தெரிவித்ததாவது:

ஆங்கில மொழிப் போட்டிகளில் மாணவர்களை அதிக எண்ணிக்கையில் பங்குபற்ற வைக்க வேண்டும். அப்போது தான் பாடசாலையை சூழ உள்ள சமூகம் முன்னேறும்.

பல ஆண்டுகளுக்கு முன் ஆங்கில மொழியில் முன்னணியில் இருந்த பாடசாலைகளுடன் இன்று பல புதிய பாடசாலைகள் போட்டியிடும் நிலைக்கு வளர்ந்துள்ளன. இதனை வளர்த்த ஆங்கில மொழி ஆசிரியர்களை பாராட்டுகிறேன்.

இப்படி அவர் கூறினார்.

(இ 152)

வீடு இடிந்து விழுந்ததில் கிளிநொச்சியில் சிறுமி பலி

கிளிநொச்சிப் புதுக்குடியிருப்பு பகுதியில் மழையினால் நனைந்து ஊறியிருந்த வீடொன்று நேற்று முன் தினம் இடிந்து விழுந்ததில் ஐந்து வயதுச் சிறுமி ஒருத்தி உயிரிழந்தார்.

சிவசேகரம் சிந்துஜா என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

வீடு இடிந்து வீழ்ந்த போது சிக்குண்ட சிறுமி கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார். போக்கு வரத்து வசதி உடனே கிடைக்காமையினாலேயே இந்தச் சிறுமி உயிரிழக்க நேரிட்டதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

(ஒ-162)

மருதங்கேணி வைத்தியசாலை நோயாளருக்கு நுளம்பு வலை

தாளையடி, டிச.29

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலைக்கும், அம்பன் பிரசவ விடுதிக்கும், படுக்கைகளுக்கான நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

வார்ட்டில் தங்கி சிகிச்சை பெறும் நோயாளர்கள் நுளம்புத் தொல்லையினால் சிரமப்படுவதை அடுத்தே அவர்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் இவ் வைத்தியசாலைகளுக்குத் தளபாடங்களும் வழங்கப்படவுள்ளன.

மாகாணசபையின் இவ் வருட நிதி ஒதுக்கீட்டிலிருந்து வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் இந் நிதியினை வழங்கியுள்ளார். (ஒ-144)

வடமராட்சி கிழக்கில் இரு தெரிவாகம்

பலகலைக்கழக மாணவருக்கு புலமைப்பரிசில் திட்டம்

தாளையடி, டிச. 29

வடமராட்சி கிழக்கிலிருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் புலமைப்பரிசில் வழங்கும் திட்டத்தினை ஆரம்பிக்க வுள்ளது.

சங்கம் வருடாந்தம் பெறும் இலாபத்தில் குறிப்பிட்டளவு தொகைப்பணம் இப் புலமைப் பரிசில் திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

(ஒ-144)

வடமராட்சி கிழக்கில் மலேரியா காய்ச்சல் தீவிரம்

வடமராட்சி கிழக்கில் மலேரியா காய்ச்சல் தீவிரமாகப் பரவத் தொடங்கியுள்ளது.

மருதங்கேணி அரசினர் வைத்தியசாலை, அம்மன் மருந்தகம் ஆகியவற்றில் இந் நோய்க்கு சிகிச்சை பெறுவருபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து வருகின்றது

இப்பகுதியில் நுளம்புத் தொல்லை அதிகரித்துள்ளதைத் தொடர்ந்தே மலேரியா தீவிரமடைந்திருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது

(ஒ-144)

விஜேதுங்க இன்று எமக்கு நிழலாக இருந்து வருகிறார்

ஐ. தே. க. மாநாட்டில் ரணில் புகழாரம்

கொழும்பு, டிச. 29

முன்னாள் ஜனாதிபதி கொலையுண்ட சமயம், அதிர்ஷ்டவசமாக திரு. விஜேதுங்கா மேதின ஊர்வலத்தை வரவேற்பதற்காக ககதநாஸ விளையாட்டரங்கின் அருகில் உள்ள நிழலில் காத்திருந்தார்.

அதனால் தான் இன்று விஜேதுங்கா எமக்கு நிழலாக இருந்து வருகிறார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா சமீபத்தில் நடைபெற்ற ஐ. தே. க. வருடாந்த மாநாட்டில் பேசுகையில் முன் கண்டவாறு தெரிவித்தார்.

(ஒ-எ)

காடு தரும் மழையில் நாடு பெறும் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண அறிவித்தல்கள்

வேலுப்பிள்ளை ஞானரத்தினம்

கன்னாகம் புவித அந்தோனியார் வீதியில் வசித்த வரும், ஒய்வு பெற்ற அரச நில அளவையாளரும், உத்தரவு பெற்ற நில அளவையாளரும், மாவட்ட நீதிமன்ற ஆணையாளருமான வேலுப்பிள்ளை ஞான ரத்தினம் 28-12-93 செவ்வாய்க்கிழமை அன்று அதி காலை இறைவனடி சேர்ந்தார்.

இவர் சிவனேசத்தின் அன்புக் கணவரும், காலஞ் சென்றவர்களான வேலுப்பிள்ளை-வள்ளியம்மை நம் பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற கோபாலகிருஷ்ணன்-ஆச்சிமுத்து தம்பதிகளின் மருமக னும், காலஞ்சென்ற திருமதி ஞானமணி சதாசிவ ரத்தினம் (ஒய்வு பெற்ற ஆசிரியை), திருமதி மகிழ் மலர் நாகராசா, வேலுப்பிள்ளை, அருள் ஞான சுந்தரம் (உரிமையாளர், அருள் ரேடர்ஸ், கன்னாகம்) ஆகியோரின சகோதரரும், கிரிதரம் (மு.சொய்சா மாடி வீடுகள் மொறட்டுவ Sascon Knitting Co Pvt. Ltd. Ja-Ela), சத்தியதரன் (யா/தொழில் நுட்பக் கல்லூரி மாணவன்), சோமநி (யா/இந்து மகளிர் கல் லூரி, உயர்தர வகுப்பு பழைய மாணவி), துஷ்யந்தி (யா/வேம்படி மகளிர் கல்லூரி, உயர்தர வகுப்பு மாணவி), தமயந்தி (சு/இராமநாதன் கல்லூரி, உயர் தர வகுப்பு மாணவி), சேந்தரன் (யா/இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், பூ.சதா சிவரத்தினம் (சட்டத்தரணி), நா. நாகராசா (இளைப் பாறிய கைத்தொழில் ஆசிரியர்), திருமதி அ. இரஞ்சித மலர், திருமதி ம. செல்வராணி, திரு. கோ. செல்வ நாயகம், திரு கோ வேணுகராசா, கோ. தேவராசா (யா/செஞ்சிலுவைச் சங்கம்), திரு. கோ. விஜயகுமார் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது ஈமக்கிரியைகள் இன்று (29-12-93) புதன்கிழமை காலை 10-00 மணியளவில் இவரது இல் லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனத்திற்காக கன் னாகம் கொத்தியாலடி பொது மயானத்திற்கு எடுத் துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
மனைவி, பிள்ளைகள்

புவித. அந்தோனியார் வீதி,
கன்னாகம். (6762)

சின்னத்துரை அசோக்குமார்

(பிரபல அரசாங்க ஒப்பந்தகாரர்)

எழுதுமட்டுவாழ் தெற்கு, அருட்பதியைச் சேர்ந்த சின்னத்துரை அசோக்குமார் 28 - 12 - 93 செவ்வாய்க் கிழமை காலமானார்.

அன்னார் சுபத்திராதேவியின் அன்புக் கணவரும், சிகதரன் (வெளிவாரிப் பட்டதாரி மாணவன்), கவிதா (யாழ். தொழில் நுட்பக் கல்லூரி மாணவி), வித்தியா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மாணவி), கிரிஜா (எழுது மட்டுவாழ் கணேச வித்தியாலய மாணவி) ஆகியோரின் தந்தையும், சின்னத்துரை (காலஞ்சென்ற, முன்னாள் மிருசுவில் கிராமச் சங்கத் தலைவர்)- சிவபாக்கியம் தம் பதிகளின் மகனும், துரைசிங்கம் - சின்னம்மா தம்பதி களின் மருமகனும், அசோகராணி, அசோகமலர் ஆகி யோரின் அன்புச் சகோதரனும், நடராசா (உதவி சுங்க ஆணையாளர் - சுங்கத் திணைக்களம், கொழும்பு), சதா னந்தன் (தொலைத் தொடர்பு உத்தியோகத்தர் - புகை யிரதத் திணைக்களம்), நடராசலிங்கம் (பிரதி அதிபர், நடேஸ்வராக் கல்லூரி), சிவயோகலிங்கம் (தபாலதிபர், பருத்தித்துறை), சித்திவிநாயகலிங்கம் (அபுதாபி), திருக்குமரலிங்கம் (தேசிய விடமைப்பு அதிகார சபை; கொழும்பு), கிருஷ்ணானந்தலிங்கம் (உள்ளூராட்சித் திணைக்களம், மன்னார்). அருட்சோதிலிங்கம் (கனடா), கெங்காதேவி, நவமணிதேவி (தபாலதிபர், எழுதுமட்டுவாழ்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29 - 12 - 93) பி. ப. 3.00 மணிக்கு இராமியன் மயானத்தில் நடை பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளு கின்றோம்.

தகவல்:
து நடராசலிங்கம்
(மைத்துனர்)

அருட்பதி,
நாகர் கோவில் வீதி,
எழுதுமட்டுவாழ். (28653)

சின்னத்தம்பி சொக்கலிங்கம்

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், ஒட்டு மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சொக்கலிங்கம் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும், இலட்சுமி திருச்செல்வம், சின்னத்தம்பி, காலஞ்சென்ற சதாசிவம் (அச்சாத்தம்பி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நவரெத்தினம் (மனேஜர்), இராசேஸ்வரி சந்திரவதனா, கமலேஸ்வரி ஆகியோ ரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (29-12-93) புதன் கிழமை 10 மணிக்கு கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
து நவரெத்தினம்
(மருமகன்)

618 மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம். (6878)

திருமதி அருளம்பலம் முத்துப்பிள்ளை

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி அருளம்பலம் முத்துப்பிள்ளை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலத்தின் மனை வியும், காலஞ்சென்ற சபாநாதன், குகதாசன், பழனி நாதன் (கணக்காய்வத் திணைக்களம்), ஓங்காரநாதன், குணநாதன் (புங்குடுதீவு மகா வித்தியாலயம்), வசந்த குணநாதன் (நில அளவைத் திணைக்களம், திருமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், குணநாயகி, சுப்பு லெட்சுமி, சந்திரமணி, ஜெயலீலா, மகாதேவி, கோகி லாம்பாள் ஆகியோரின் அன்பு மாமியாரும், பாறுபதிப் பிள்ளை, காலஞ்சென்றவர்களான கதிரேசு, சண்முகம் பிள்ளை, முத்தையா, இராமாநிப்பிள்ளை, சின்னாச் சிப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரியும், வசந்த ருபன், தர்சினி, அருட்குமரன், கமலிவி, நிரஞ்சலி, நிமலராஜ், நிலகராஜ், விஜிதன், வாகீசன், விபீசன், வனஜன், வினோபாஜி, வினோராஜி, விபூஷிதன், வினோ கரன், விதுசிகன், கோபிகா, சாருஜன் ஆகியோரின் பாசமிகு அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எமது இல்லத்தில் இன்று (29-12-93) பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொக்குவில் மயானத்திற்கு தகனக்கிரியைக் காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற் றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. பழனிநாதன்
அ. ஓங்காரநாதன்
(மகன்மார்)

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு. (28654)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29 - 12 - 1993 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

வாழ்க்கை திறன் கல்வி

யாழ்ப்பாணம், டிச.29

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள அனைத்துப் பாட சாலைகளிலும் 1994 ஆம் ஆண்டில் இருந்து வாழ்க்கைத் திறன் கல்வி போதிக்கப்பட வுள்ளது.

1987 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட வாழ்க்கைத்திறன் கல்வி இந்த ஆண்டுடன் முழுமை பெறு கின்றது.

1994 ஜனவரியில் இருந்து யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 263 பாடசாலைகளி லும் இக் கல்வியை போதிப் பதற்கு நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளதாக இக்கல்விக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. ச. சுப்பிர மணியம் தெரிவித்தார். (இ-152)

பொன்விழா போட்டி முடிவு

யாழ்ப்பாணம், டிச. 29

வல்லை சனசமூக சேவா நிலையத்தின் பொன்விழா இலக்கியப் போட்டி முடிவுகள் குறித்து அறிவிக்கப்பட்டுள் ளது.

கவிதைப் போட்டியில் முத லாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெறுவோர் முறையே நடராசா இராம நாதன் – அல்வாய் வடக்கு, யோ. ஜெயவதனி – முக மாலை, இரா. இராஜேஸ் வரன்– கரவெட்டி வடக்கு.

சுட்டுரைப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன் றாம் இடங்களைப் பெறு வோர் முறையே யோ. ஜெய வதனி – முகமாலை, கிருத் திகா சோமசுந்தரம் – வல் வெட்டித்துறை, சந்திரன் செல்வகுணசந்திரன் - பருத் தித்துறை.

சிறுகதைப் போட்டியில் தி. உதயசூரியன் - சுழிபுரம், இ. ஜெயக்குமரன் - புலோலி மேற்கு, ஸ்மித்குமார் - வல் வெட்டித்துறை ஆகியோர் முறையே முதலாம், இரண் டாம், மூன்றாம் இடங் களைப் பெற்றனர். (ஒ)

கடற்புலிகளைச்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது நிர்மாணித்து வரும் இரண்டு அதிவேக தாக் குதல் கப்பல்களுக்கு புறம்பா கவே முன்கூறப்பட்ட மூன்று கப்பல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பிரெஞ்சு நிறுவனம் தற் போது நிர்மாணித்து வரும் இரண்டு அதிவேக தாக் குதல் கப்பல்களுக்கு புறம்பா கவே முன்கூறப்பட்ட மூன்று கப்பல்களும் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பிரெஞ்சு நிறுவனம் தற் போது நிர்மாணித்து வரும் இரண்டு கப்பல்களையும் அடுத்த சில வாரங்களில் விடு தலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் கடற்படை யினர் ஈடுபடுத்துவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில் பிரெஞ்சு நிறுவனம் நிர்மாணித்து வரும் கப்பல்கள் போன்று வேறு இரண்டு ரோந்து படகுகளை கொழும்பு டொக் யார்ட் நிறுவனம் நிர்மா ணித்து வருவதாகத் தெரிவிக் கப்படுகிறது. (இ-எ)

மட்டக்களப்பு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சனியன்று இரவு 8 மணி யளவில் பாலையடி வெட்டை ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினர் பலாச்சோலை கிராமத்துக்கு சென்று ஒரு வீட்டை சுற்றி வளைத்து எட்டுப் பிள்ளைகளின் தந்தை ஒருவரை கைது செய்து முகா முக்கு கொண்டுசென்றனர்.

ஞாயிறன்று காலை 5-30 மணியளவில் விசேட அதிர டிப்படையினர் பலாச்சோலை கிராமத்தை மீண்டும் சுற்றி வளைத்து மற்றொருவரை கைது செய்து முகாமுக்கு கொண்டு சென்றனர்.

இதேதினம் காலை கண்ண கிபுரம் முகாம் இராணுவத் தினர் நெடுங்கேணி என்ற இடத்தில் வைத்து இரு தமிழ் மக்களை கைது செய்தனர்.

மட்டக்களப்பு மாவட்டத் தில் பலபகுதிகளும் பரவலாக கைதுகள் தொடர்ந்து நடை பெறுகின்றன என்றும் தெரி விக்கப்பட்டது. (இ-3)

மேலும் ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேவைப்படுகிறது.

அடுத்த ஆண்டு முற்பகுதி யில் தேவையான ஆயுதங் களை கொள்வனவு செய்ய அரசு அக்கறை காட்டியுள் ளது.

இதேவேளை—

புதிதாகத் திரட்டப்பட்ட 10 ஆயிரம் படையினரில் ஒரு பகுதியினருக்கு பயிற்சி அளிப் பது தொடருகிறது. இவர் களைக் கொண்டு புதிதாக 10 காலாட்படையணிகளை அமைக்க இராணுவத் தலை மைப்பீடம் திட்டமிட்டு வரு கிறது.

புதிய படைப்பிரிவுகள் தற் போதுள்ள நிரந்தர, தொண் டர் இராணுவ அணிகளுக்கு உதவியாகச் செயல்படும்.

புதிய படைப் பிரிவுகளுக்கு ஆயுதங்கள் வழங்குவது பெரிய வேலையாக இருக்கப் போகிறது என்று அதிகாரிகள் கூறினார்கள். (உ-எ)

கிழக்கு வெள்ளத்தில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேர் விடிழந்துள்ளதாகவும் — செய்திகள் தெரிவிக்கின்றன.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுவ தாகவும் —

சேதங்கள் குறித்து மதிப்பீடு செய்யும்வரை தொடர்ந்து நிவாரணம் வழங்குமாறு அரசு உத்தரவிட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

புத்தளம், கண்டி, குருநாகல், அனுராதபுரம் பகுதிகளி லும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும் — இலங்கை அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி, வவுனியா மாவட்டங்களிலும். கடும் மழை பெய்வதாகவும் இலங்கை வானொலி தெரிவித்தது.

(இ-எ-3-6)

யுத்தத்தை உடன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முயற்சிகள் நிறுத்தப்பட வேண் டும்.

யுத்தம் நிறுத்தப்பட வேண் டும். விடுதலைப் புலிகளுடன் உடன் பேச்சுகள் ஆரம்பிக் கப்பட வேண்டும்.

சாதாரண அப்பாவி மக்க ளுக்கு இந்தப் போர் தேவை யற்றது. இரு தரப்பிலும் கொல்லப்படுவது அவர்களின் பிள்ளைகளே.

தமிழ் மக்களின் கோரிக்கை களையும் தமிழ் மக்கள் படும் துன்ப துயரங்களையும் சிங் கள மக்கள் உணர்ந்து கொள் ளும் காலம் வந்துவிட்டது. இது தான் பேச்சுவார்த்தை களுக்கு அடிப்படையாக இருக்க வேண்டும்.— என்றார் தேரர்.

பூநகரிப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தோல்விகள் பற்றி புதிதாக என்ன சொல்ல வேண்டியிருக் கிறது?

கிளாலி, பூநகரியில் இரா ணுவம் பேரழிவுகளைச் சந் தித்தது என்பதில் சந்தேகமே இல்லை.

ஆனால் விடுதலைப் புலிக ளுடனான யுத்தத்தில் இரா ணுவம் ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக தோல்வி களையே சந்தித்து வந்துள் ளது என்ற உண்மையை நாம் நோக்க வேண்டும். அப் படி இல்லாவிடில் இன்று விடு தலைப் புலிகள் இவ்வளவு பலம் பெற்று இருப்பார்களா?

யுத்தம் ஆரம்பமான காலம் முதல் இராணுவம் முன்னேறு வதும், நூற்றுக்கணக்கில் இறப்பதும், இலக்கை அடைந் ததும் அங்கு ஒன்றையும் காணவில்லை என்றவுடன் மீண்டும் பழைய நிலைக்கு வாபஸ்வாங்குவது தான் இரா ணுவத்தின் நடவடிக்கைக ளாக அமைந்து வந்துள்ளன.

எதிரியின் தற்போதைய பலத்துக்கு முன்னால் இந்த இராணுவ நடவடிக்கைகள் எல்லாம் வெறும் கண்துடைப் பாகும்.

எப்போதாவது கைப்பற்றி தக்கவைத்தா?

எங்கேயாவது இலங்கை இராணுவம் முன்னேறி இடங் களைக் கைப்பற்றியதுண்டா? அப்படி கைப்பற்றப்பட்ட இடங்களை இராணுவம் தக்க வைத்ததுண்டா? இதனைச் செய்வதற்கு எமது இராணு வத்திடம் ஆட்பலம் இல்லை. அன்று இந்திய இராணு வத்தை முன்னாள் ஜனாதிபதி ஜெயவர்த்தனா அழைத்ததற் கான பிரதான காரணங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்திய இராணுவத்தின் உதவியின்றி இப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு வேறு வழியே கிடையாது.

இந்திய இராணுவத்தை யுத்தத்தில் ஈடுபடுத்தாவிட் டாலும் கைப்பற்றப்பட்ட பிர தேசங்களை தக்கவைத்துக் கொள்வதற்காகவாவது பயன் படுத்த முடியும்.

இன்று உலகிலேயே யுத்தம் புரியக்கூடிய சிறந்த பலம் பொருந்திய சக்தியாக விடுத லைப் புலிகள் இயக்கம் விளங் குகின்றது என்பதில் சந்தே கமே இல்லை.

எப்படியிருப்பினும் இலங் கைக்கும் அதன் நாகரீகத்துக் கும் பெரும் அச்சுறுத்தலாக ஜே. வி. பியே இருந்தது; விடு தலைப் புலிகள் இயக்கம் அல்ல.

சிங்கள மேஜர் ஜெனரல் என்ற அந் தஸ்துடன் தென் இலங்கை யில் ஜே. வி. பி நடவடிக்கை களை அடக்கினார்.

தனது தனிப்பட்ட அரசியல் நன்மைகருதி ஜே. வி. பியுடன் கூட்டு வைக்க முயற்சித்த பிரேமதாஸாவுடன் சேர்ந்து வைத்தியரத்னா வும் பந்து விளையாடி இருந்தால் இன்று இலங்கையே இருந்திருக்காது.

இராணுவத்தில் இருந்து மேஜர் ஜெனரலாக ஓய்வு பெறவிருந்த சமயம்தான் சிங்கள பிரேமதாஸா தளபதி யாக்கினார்

முன்னாள் ஜனாதிபதி ஜெய வர்த்தனாவை 'மாமா' என் றழைக்கும் சிங்கள பிரேம தாஸா தளபதியாக நியமித் தது பலருக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது. திருமண மும் முடிந்த சிங்கள, ஜெயவர்த்தனா வுக்கு நெருக்கமான உறவினர் ஆவார்.

—இப்படி அக்கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-எ)

தீஸ்ஸ பாலசூரியா

சமூக, சமய நடு நிலையத் தைச் சேர்ந்த வன. தீஸ்ஸ பாலசூரியா தமது உரையில் கூறியதாவது:-

கடந்த பத்து ஆண்டுகளாக நடக்கும் சண்டை, யுத்தம் மூலம் தீர்வு கிட்ட முடியாது என்பதை உணர்த்துகிறது.

இலங்கை இனப்பிரச்சினை யில் பலத்தைப் பிரயோகிப் பது தொடர்ந்தது; வன்முறை யைப் பயன்படுத்த ஆரம்பித் தது தெற்கிலிருந்தாகும். இத னால் தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்த நிர்ப்பந்திக்கப் பட்டார்கள்.

நாங்களே தமிழ் மக்களை ஒரு தீவிரவாத நிலைக்குத் தள்ளினோம்.

இனத்துவம் என்பது ஒரு நிதர்சனம்.

இனம், வேலைவாய்ப்பு, கல்வி, பாதுகாப்பு போன்ற துறைகளில் தமிழர்களுக்குப் பிரச்சினை இருக்கிறது என்று 1977 ஆம் ஆண்டு தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஐ. தே. க. ஒப்புக் கொண்டுள்ளது.

ஆனால் இன்று வடக்கு— கிழக்கு பிரச்சினை ஒரு பயங் கரவாதப் பிரச்சினை என்றே ஜனாதிபதி கூறுகிறார். இது வன்மையாக எதிர்க்கப்பட வேண்டிய ஒரு கருத்தாகும்.

ஜனாதிபதியின் அதிகாரங் களை நீக்கும்—

தன்னாட்சி அமைப்பை அர்த்தமுள்ளதாக்கும்—

அரசமைப்புத் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் நாட்டை ஆளும் நடவ டிக்கையை அரசு நிறுத்த வேண்டும்.

இன்றைய இனப்பிரச் சினை நிலைக்குத் நற்போதைய ஆரசியல் தலைமையிடமும் ஓரளவு பொறுப்பேற்க வேண் டும்.

அரசியல் கட்சிகள் எதிர் வரும் தேர்தல் பிரசாரங்களுக் காக தேர்தல் விஞ்ஞாபனங் களை வெளியிடும் போது தாம் அமைதியையே— சமா தானத்தையே நாடுகின்றன என்பதை அவற்றில் வலியு றுத்த வேண்டும்.

— இவ்வாறு வண. பால சூரிய தெரிவித்தார்.

கலாநிதி உயங்கொட

கொழும்பு பல்கலைக் கழ கத்தைச் சேர்ந்த கலாநிதி ஜெயதேவ உயங்கொட பேசு கையில் கூறியதாவது:-

பூநகரித் தாக்குதலின் பின் னர் போர் மீண்டும் அரசியல் மயப்படுத்தப்பட்டு வருகின் றது.

உலக நாடுகள் பலவற்றில் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண வெளிநாட்டுத் தலை யீடுகள் இடம்பெற்று வரு கின்றது. இந்த உதாரணங் களிலிருந்து இலங்கை பாடம் படித்துக்கொள்ள வேண்டும்.

நோர்வே தலையீட்டினால் பலஸ்தீன — இஸ்ரேல் பிரச் சினைக்குத் தீர்வு ஏற்பட்டது. ஐ.நா. தலையீட்டினால் கம் போடிய, சோமாலிய பிரச் சினைக்குத் தீர்வு காணப்பட வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் தலை யீட்டை ஏற்றுக்கொள்ள இலங்கை தயாராக இருக்க விட்டால் —

பிலிப்பீன்ஸிலும், எல்சல்வ டோரிலும் ஜனநாயக சிவில் சமூகத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதை இங்கு பின்பற்றலாம்.

பிரச்சினையில் சம்பந்தப் பட்டோர் மீது அழுத்தத்தைக் கொடுக்கத்தக்க வகையில், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் சமாதா னத்துக்கான பிரஜைகள் இயக்கம் ஆரம்பிக்கப்பட வேண்டும் – என்றார் கலாநிதி உயங்கொட.

நீலன் திருச்செல்வம்

இனப்பிரச்சினை பற்றிய அறிவைப் போதிப்பதற்கான சர்வதேச மத்திய நிலையத் னர் சேர்ந்த கலாநிதி நீலன் திருச்செல்வம் உரையாற்று கையில் —

சமாதானத்தை ஏற்படுத் தும் முயற்சியில் தேசிய நட டிக்கைகள் பலன் தராவிட் டால் மேற்குலக நாட்டு நடுவர் ஒருவரை சமாதான முயற்சிகளை முன்னெடுத்துக் செல்ல வைக்கலாம் என்றார்.

கொழும்பு பல்கலைக் கழ கத்தைச் சேர்ந்த — அரசியல் விஞ்ஞானத் துறைப் பேராசி யர் தயாகியசோதி சரவண முத்து உட்பட மேலும் பலர் பாராட்டில் உரையாற் றினர். (உ-3-6)

வெள்ள அனர்த்தம்:

பச்சிலைப்பள்ளி பகுதியில் 1,200 வீடுகள் இடிந்து சேதம்

அண்மையில் பெய்த பெரு மழையினால் பச்சிலைப்பள் ளிப் பகுதியில் சுமார் 6 ஆயி ரம் குடும்பங்கள் வெள்ளத் தினால் பாதிக்கப்பட்டுள் ளன. சுமார் ஆயிரத்து 200 வீடுகள் வெள்ளத்தினால் விழ்ந்து சேதமாகியுள்ளன.

கச்சாய் வெளி, செல்வ புரம், வேம்பொடுகேணி, பெரியபளை, வண்ணான் கேணி, மாசார் முகமாலை கிராமசேவை அலுவலர் பிரிவு களே பெரிதும் பாதிப்புக்குள் ளாகியுள்ளன.

ஆயிரத்திற்கு மேற்பட்ட குடும்பங்கள் இடம் பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் ஆல யங்களில் தஞ்சமடைந்துள்ள னர். (ஒ-17)

இயங்காத சனசமூக நிலையங்களின் உதவிகள் நிறுத்தப்படும்.

யாழ்ப்பாணம், டிச. 29

இவ்வருட இறுதிக்குள் தமது வருடாந்த கூட்டத்தை கூட்டி புதுவருட நிர்வாகி களை தெரிவு செய்யாத சன சமூக நிலையங்கள் செய லிழந்தவையாக கருதப்படும். அவற்றுக்கான அனைத்து உதவிகளையும் நிறுத்து வதற்கு நடவடிக்கை எடுக் கப்படும் என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள சனசமூக நிலையங் களும் டிசம்பர் 31 ஆம் திகதி க்கு முன்னர் வருடாந்த கூட் டத்தை நடத்த வேண்டும் எனவும்,

புதிய நிர்வாகிகளை தெரிவு செய்யாத சனசமூக நிலை யங்கள் அனைத்தும் இயங் காத – செயலிழந்தவையாக கருதப்படுமெனவும்,

அவற்றுக்கு வழங்கப்பட்டு வந்த சகல உதவிகளும் இதன் பின்னர் நிறுத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்படும் என றும் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாசம் அறிவித்துள்ளது. (இ-152)

மரண அறிவித்தல்கள்

சொர்ணலிங்கம் தில்லையம்பலம்

(இலங்கை மின்சாரசபை முன்னாள் உத்தியோகத்தர், கொழும்பு)

புங்குடுதீவு 5 ம் வட்டாரத்தை பிறப்பிடமாகக் கொண்ட சொர்ணலிங்கம் தில்லையம்பலம் அவர்கள் 25-12-93 அன்று லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சொர்ணலிங்கம்—அன்ன முத்துவின் அன்பு மகனும், காலஞ்சென்ற பொன்னம் பலம் (மௌலனார)இராசம்மாவின் அன்பு மருமகனும், ஞானலேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜனகன் (பிரான்ஸ்), சுவேனிஜா, சொருபினி, நிரூசானந்தன் ஆகியோரின் அன்புத்தந்தையுமாவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், அனைவ ருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்
திருமதி பொ இராசம்மா

இல.65, புங்கங்குளம் வீதி,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம். (28650)

மகாகணபதிக்குருக்கள் சுப்பிரமணியக்குருக்கள்

(வியாபாரிமூலை இன்பர்சிட்டி சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு)

வியாபாரிமூலையை பிறப்பிடமாகவும், துவாளிப் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகாகணபதிக்குருக்கள் சுப்பிரமணியக்குரு கள் 28-12-1993 அன்று சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் மகேஸ்வரியின் அன்புக் கணவரும், திருமதி நி. செல்வமதி (பேராதனை), திருமதி கு. இந்துமதி, இராஜலக்சுமி (ஆசிரியை, ஹாட்லிக் கல் லூரி, பருத்தித்துறை), விக்னராஜாக்குருக்கள் (மாடந்தை சித்திவிநாயகர் ஆலய பிரதம குரு), தண்ட பாணி தேசிகர் (சமரபாகு கற்பகப் பிள்ளையார் பிரதமகுரு), சுந்தரி, கலைவாணி, தாமரைச்செல்வி ஆகியோரின் அருமைத் தந்தையாகும், நித்தியானந்தக் குருக்கள், குஞ்சிதபாதக்குருக்கள் ஆகியோரின் மாம னாரும், திருஞானசம்பந்தக்குருக்கள், மாணிக்கவாசகக் குருக்கள், இரத்தினசபாபதிக்குருக்கள், சிவானந்த ராஜாக்குருக்கள், மகேஸ்வரி ஆகியோரின் சகோதர ரும், தி. அப்பாத்துரைக் குருக்கள் (துவாளிப் பிள்ளை யார் பிரதமகுரு), இராஜேஸ்வரி ஆகியோரின் மைத் துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (29-12-93) பிற்பகல் 2 மணியளவில் வல்லை இந்து மயானத்தில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. விக்னராஜாக்குருக்கள்.
(மகன்)

உடுப்பிட்டி. (28655)

திருமதி சிவயோகம்மா முருகேசு

(6 ஆம் வட்டாரம், புங்குடுதீவு)

புங்குடுதீவு 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி சிவயோகம்மா முருகேசு காலமாகிவிட்டார்.

இவர் காலஞ் சென்ற மா. முருகேசு உடையார் அவர்களின் அன்பு மனைவியும், வில்லியலெட்சுமி (லண் டன்), விமலா (ஆசிரியை, யாழ். இந்து ஆரம்ப பாட சாலை), இந்திராதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், க. பாலச்சந்திரன் (தொழில் நுட்ப வியலாளர், மருந்தகம் லண்டன்), மு. சிவபாதம் (சேவைக் கால ஆலோசகர், நல்லூர் கோட்டம்), க.செல்வராசா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமி யாரும், காலஞ் சென்ற வி. கார்த்திகேசு (மேற்பார்வை யாளர், பால் சபை யாழ்.), காலஞ்சென்ற வி.சோமஸ் கந்தன் (உப தபாலதிபர், இறுப்பிட்டி), காலஞ்சென்ற வி. நடராசா (கூட்டுறவு பரிசோதகர், யாழ்.), டாக் டர் வி. கனகரெத்தினம் (வத்தேகம), பொ. சிவகாமிப் பிள்ளை (மலேயா), ந. மங்கையர்க்கரசி, சி.மீனாட்சி (இளைப்பாறிய ஆசிரியை, சித்திவிநாயகர் புங்குடு தீவு), சி. பாவதபத்தினி (கொழும்பு) ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற ந. பொன்னம் பலம் (நிர்வாக உத்தியோகஸ்தர், கட்டடத் திணைக் களம் மலேயா), நா. ஆ. நமசிவாயம் (மரண விசா ரணை அதிகாரி, புங்குடுதீவு), காலஞ்சென்ற செ.சிங்க ராசா (முகாரி, கட்டடத் திணைக்களம் யாழ்.), காலஞ் சென்ற இ. சிந்தூராசா (பிரபல வர்த்தகர் கொழும்பு), கா. அமிர்தகௌரி, க. தடாதகைபிராட்டி (ஆசிரிய வத்தேகம) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று புதன்(29-12-93) பி.ப. 3 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோருக்கு அறியத் தருகின்றோம்.

தகவல்:
மு. சிவபாதம்
(மருமகன்)

90. குறுக்கு வீதி,
நல்லூர். (28656)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org